19/12/2018 DVC 1/2017 R.W.1 Ramesh

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எம்.பி.ஏ. படித்திருக்கிறேன். திருமணத்திற்கு முன்பு துபாயில் வேலை பார்த்தேன். 34000/- ரூபாய் அளவுக்கு மாத சம்பளம் வாங்கினேன். சம்பளம் வாங்கியதற்கு ஸ்லிப் எதுவும் கிடையாது. மூன்று மாத வீட்டு வாடகை 1250/- திர்உறம்.அப்போது ஒரு திர்உறம் 17 ரூபாய் ஆகும். எனது ஜாதகத்தில் எனது அம்மா, அப்பாவுக்கு எத்தனை வயதில் கண்டம் என்று குறிப்பிட்டுள்ளது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இதுவரையில் அதை நான் பார்க்கவில்லை. எனது குழந்தையின் ஜாதகம் பார்க்கவில்லை. எனது குழந்தையின் ஜாதகப்படி அம்மா அப்பாவுக்கு கண்டம் என்று இருந்தால் குழந்தையை வைத்துக்கொள்வேனா, துரத்திவிடுவேனா என்றால் வைத்துக் கொள்வேன். எனக்கு ஜாதகத்தின் மேல் ரொம்ப நம்பிக்கை இருக்கிறது. குழந்தை பிறந்துவிட்டால் அம்மா, அப்பா ஜாதகத்தை பார்க்கவேண்டியதில்லை என்றால் அதை பற்றி நான் கேள்விப்படவில்லை. எனக்கு திருமணமாகி இரண்டு மாதங்கள் கழித்து மனுதாரரின் இரண்டாவது ஜாதகம் கிடைத்தது. எனக்கு தங்கை இருக்கிறார். தம்பி யாரும் இல்லை. ஜாதகத்தின் மூலம் கருத்து வேற்றுமை ஆரம்பித்தது. வேறு வகையிலும் கருத்து வேற்றுமை இருக்கிறது. ஜாதகத்தை திருகணிதம், வாக்கிய பஞ்சாங்கம் என்று இருவகையில் கணிப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கம்ப்யூட்டரில் ஜாதகம் கணிப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆகிய இரண்டு ஜாதகத்திலும் மனுதாரர் பிறந்த நேரம் ஒரே நேரமாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நான் வழக்கமாக பார்க்கக்கூடிய ஜோசியர் யாருமே இல்லை. கல்யாணத்திற்கு முன்பு முசிறி பரிசில்துறை ரோட்டில் உள்ள ஜெகதீசன் என்ற ஜோசியரிடம் ஜாதகம் பார்த்தேன். எனது ஜாதகத்தை பார்த்துவிட்டு எனக்கு இரண்டு மனைவிகள் என்றும், முதல் மனைவி என்னோடு வாழமாட்டார் என்றும் சொன்னாரா என்றால் அப்போது சொல்லவில்லை. இரண்டு ஜாதகங்களையும் ஜெகதீசனிடம் காண்பித்து எது சரியாக இருக்கிறது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர் எ.ம.சா.ஆ.2ல் உள்ள ஜாதகம் தான் சரி என்று சொன்னார். அந்த ஜோசியரை சாட்சியாக விசாரிக்கப்போவதில்லை. இரண்டு ஜாதகத்தையும் ஜோசியரிடம் காண்பித்தேன் என்றும், அதில் இரண்டாவது ஜாதகம் தான் சரியாக இருக்கிறது என்றும் ஜோசியர் சொன்னார் என்றும் வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். திருமணமான பிறகு எதற்காக ஜாதகத்தை பார்த்தேன் என்றால் நாங்கள் ஏற்கனவே பதிவு செய்து வைத்திருந்ததால் வரன் வந்திருக்கிறது என்று போன் வந்தபோது எனது அப்பா போய் பார்த்தார். அப்போது இந்த ஜாதகத்தை பார்த்தார். போனில் திருமணமாகிவிட்டது என்று சொல்லியிருந்தால் என் பெயரை அடித்துவிடுவார்கள் என்றால் நேரில் வரச்சொன்னார்கள். எ.ம.சா.ஆ.2ல் முதலாம் மனுதாரர் கையெழுத்தோ அல்லது அவரது தகப்பனாரின் கையெழுத்தோ இருக்கிறதா என்றால் இல்லை. இது போல் ஒரு ஜாதகத்தை தேவசேனா திருமண தகவல் மையத்தில் மனுதாரர் தரப்பில் யாரும் கொண்டு போய் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதுவரை எனது மகளுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று முயற்சி எதுவும் எடுக்கவில்லை. இதுவரை எனது

மகளுக்கு ஏதாவது பணம் அனுப்பியிருக்கிறேனா என்றால் அனுப்பவில்லை. எனக்கு குழந்தை பிறந்த விவரம் தெரியும். எனது குழந்தை போனில் பேசியதற்காக போலிசில் புகார் கொடுத்தேன் என்றால் எனது மாமனார் திட்டியதற்காக புகார் கொடுத்தேன்.. போலிசில் புகார் கொடுத்ததற்கு இரசீது வாங்கியிருக்கிறேன். மாமனார் திட்டியதாக புகார் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றும், குழந்தை பேசியதற்காக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இரண்டு மாதத்தில் எனது மனைவிக்கு மூல நட்சத்திரம் என்று தெரிந்தவுடன் என் மனைவியுடன் வாழக்கூடாது என்று முடிவு எடுத்தேனா என்றால் இல்லை. மூல நட்சத்திரம் என்று தெரிந்த பிறகும் குடும்பம் நடத்தி ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்றால் சரிதான்.

(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோள்படி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஓம். ரமேஷ்)

(Sd./-A.B. Naseer Ali),
Judicial Magistrate, Musiri.